(3) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1975)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

பழத் தோட்டங்கள், தோப்புகள், பாக்கு மரத் தோட்டங்கள், விறகு மரங்கள் வளர்ப்பதற்கென்றே பயன்படுத்தப்படும் நிலங்கள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) விதித் துறைகளிலிருந்து விலக்களிக்க மேற்படி சட்டத்தின் 73 ஆவது பிரிவைச் சேர்ந்த (vii), (viii) பகுதிகள் வகை செய்கின்றன. அந்த நிலங்கள், அந்தந்த நேர்விற்கேற்ப, பழத் தோட்டங்களாகவோ, பாக்கு மரத் தோட்டங்களாகவோ தொடர்ந்து இருக்கும்வரை, அல்லது விறகு மரங்கள் வளர்ப்பதற்கென்றே பயன்படுத்தப்படும் நிலங்களாகத் தொடர்ந்து இருக்கும்வரை மட்டும்தான் அத்தகைய நிலங்களுக்கு விலக்களிக்கப்படலாம் என்று மேற்படி பகுதிகளைச் சேர்ந்த வரம்பு நிபந்தனைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. அத்தகைய நிலங்களை நில உரிமையாளர்கள் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தாதவாறு தடை செய்வதே இந்த வரம்பு நிபந்தனைகளின் நோக்கமாகும். ஆனால் மேற்படி 73 ஆவது பிரிவின் (vi) பகுதியின்கீழ் விலக்களிக்கப்பட்ட மலைத் தோட்டங்கள் குறித்து இத்தகைய வரையறைகள் எதுவும் இல்லை. மலைத் தோட்டங்களுக்கு முதலில் விலக்கு பெற்று, அவ்வாறு விலக்களிக்கப்பட்ட நிலங்களைப் பின்னர் பிற காரியங்களுக்குப் பயன்படுத்த நில உரிமையாளர்களுக்கு மனப்பான்மையைத் தடுக்க, (vii), (viii) பகுதிகளின்கீழ் உள்ளதைப் போன்று வரம்பு நிபந்தனையை மேற்படி சட்டத்தின் 73 ஆவது பிரிவைச் சேர்ந்த (vi) பகுதியில் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க மேற்படி சட்ட வரைவு விழைகிறது. எனவே இந்த சட்ட வரைவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மன்றத்தினைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

@ 276–277-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* திரு. கே. ராஜாராம் : துணைத் தலைவரவர்களே, முதலில் ஒவ்வொரு வரும் 30 ஏக்கர் வரை வைத்துக்கொள்ளலாமென்று உச்ச வரம்பு வந்த பொழுது, இம்மாதிரி தோப்புகள், துரவுகள், பாக்குத் தோப்புகள் இன்னும் விறகுக்கு வேண்டி பயிரிடப்படும் சவுக்கு மரத் தோப்புகள் போன்றவைகளை எல்லாம் இந்த உச்சவரம்பு மொத்த ஏக்கர்களில் சேர்க்கக் கூடாது, இதற்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்ற மிக நல்ல எண்ணத்துடன், அப்பொழுதிருந்த பேரவையும் மேலவையும் ஏகமனதாக சட்டத்தை நிறைவேற்றி, இந்த விதி விலக்கைக் கொடுத்திருந்தன. எந்தச் சட்டத்தையும் அமுல்படுத்தும் பொழுதுதான், அதிலுள்ள குறைபாடுகள் நமக்குத் தெரியும். இப்பொழுது சில பேர் மாந்தோப்பு போன்றவை களுக்காக விடப்பட்டிருந்த தோப்புகளை அழித்துவிட்டு, நெற்பயிர் போன்ற பயிர் விளைவிக்கும் வேறு விவசாய நிலங்களாக அவைகளை உபயோகப் படுத்த ஆரம்பித்த பிறகும், ஏற்கெனவே அவை உச்ச வரம்புக்கு அப்பாற் பட்ட நிலங்களாக இருப்பதனால், அவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு இது ஒரு வழி போன்று ஆகிவிட்டது. அதைத் தடுப்பதற்காக இந்த மசோதா வந்திருக்கிறது என்ற முறையில் நான் இதை வரவேற்கிறேன். ஆனால் சவுக்குத் தோப்புகளைப் பொறுத்தவரையில், அதை வெட்டினால், மீண்டும் ஒரு வருஷம் அல்லது $1\frac{1}{2}$ வருஷம் கழித்த பிறகுதான் சவுக்கு வைக்க வேண்டியிருக்கும். ஆகவே அந்த இடைக் காலத்தில் தோப்பை விட்டு விட்டு சும்மா இருக்கிறதே, இதை ஏன் உச்ச வரம்பிலிருந்து கழிக்கக் கூடாது என்று வரக்கூடாது. மற்ற தோப்புகளைப் போல் அல்ல இது. இந்த சவுக்குத் தோப்பு விறகுக்காக வைக்கப்படும் தோப்பு, வெட்டினால் உடனே நட முடியாது, கொஞ்சம் காலம் கழித்துத்தான்—ஒரு வருஷம், ஒன்றரை வருஷம் கழித்துத்தான்—அதை நடுவார்கள். அம்மாதிரி விவ சாயிகள் தென்னார்காடு மாவட்டத்தில்தான் மிக அதிகம்; மற்ற மாவட்டங்களிலும் கொஞ்சம் இருக்கலாம். தென்னார்காடு மாவட்டத்தின் கடற்கரை ஓரமாகச் சென்றால், அந்தப் பகுதியில் எங்கே பார்த்தாலும் சவுக்கு மரத் தோப்புகளைத்தான் காண முடியும்—காரணம் கடல் மணல் பிரதேசமாக இருப்பது. அது சென்னை நகரின் ஒரு பெரிய சுமையைக் குறைப்பதாயிருக்கிறது.

திரு. எஸ். டி. ஆதித்தன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்ன சவுக்கு மரம் மாதிரி திருநெல்வேலி மாவட்டத்தில் விறகுக்குப் பயன்படும் உடை மரமும் வெட்டின உடனே நட முடியாது. ஒரு வருஷம், இரண்டு வருஷம் கழித்துத்தான் அதை உற்பத்தி பண்ண முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : நண்பர் திரு. ஆதித்தன் அவர்கள் எழுந்தவுடன், அவர் கவனமெல்லாம் பனைத் தோப்பிலே இருக்கும், அதைப்பற்றித்தான் சொல்ல எழுந்திருக்கிறார் என்று நினைத்தேன். ஆனால் அதைப்பற்றிச் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். திருநெல்வேலி ஜில்லா பூராவிலுமே பனைத் தோப்புகளைக் காணலாம். பனைத் தோப்பும் இதில்

உட்பட்டதுதான். பனைமரத்தையும் வெட்டினால், உடனே மறுபடியும் வைக்க முடியாது. ஒரு வருஷம், இரண்டு வருஷம் கழித்துத்தான் வைக்க இயலும். ஆகவே அரசு (ரூல்ஸ்) விதிகள் போடும்பொழுது—பனந் தோப்பு, உடைமரத் தோப்பு, கருவேலம் தோப்பு, ரப்பர் பிளான்டேசன் போன்ற பியூவல் மரங்களை எல்லாம் கொஞ்சம் இடைவெளி விட்டுத்தான் நடுவார்கள்— இதையெல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஒன்று மட்டும் நான் சொல்கிறேன். அவர்கள் அதை மாற்றி வேறு நிலமாக ஆக்கக் கூடாது. தோப்பாகவே அதை உபயோகப்படுத்த வேண்டுமென்று வைத்துக்கொள்ள வேண்டுமேயொழிய தரிசாக இருக்கிறது, ஆகையினால் உச்சவரம்பிலிருந்து அதை எடுத்து விடுவோம் என்று எடுத்துவிடக் கூடாது. இரண்டு வருஷம் இடைவெளியாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

(பிற்பகல் 5-20)

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம்: துணைத் தலைவரவர்களே, இந்தத் திருத்த வரைவினை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் வரவேற்று சட்டப்படி சில உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். பொதுவாக தமிழ் நாட்டிலே உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் விலக்கு அளிக்கப்பட்ட பல்வேறு இனங்களுக்கு இப்போது அந்த விலக்குகளை எடுத்திருக்கிறோம். உதாரணமாக, கரும்பு பயிரிடுவதற்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இப்போது கரும்புத் தோட்டங்களுக்கான அந்த விலக்கு ரத்து செய்யப்பட்டு, ஆரூரான் சர்க்கரை ஆலைகள் போன்ற நிறுவனங்களிடமிருந்த அந்த நிலங்களையெல்லாம்கூட அரசாங்கமே ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இதிலே உள்ள சிக்கல், நாம் ஏற்கெனவே மேய்ச்சல் தரைக்கு விலக்கு அளித்திருந்தோம். மதிப்பிற்குரிய மன்றாடியார், நெய்க்காரப்பட்டி ஜமீன்தார் போன்றவர்கள் எல்லாம் நீதிமன்றங்களை அணுகி, மேய்ச்சல் தரை, புல் தரை என்று இருந்தாலும், அவர்கள் நீதிமன்றத்தில் வாதாடியது, அங்கே உற்பத்தி செய்யப்படுவது வைக்கோல் தான். ஆகவே நெல் பயிரிட்டாலும், அதுவும் மேய்ச்சல் தரையைச் சேர்ந்ததுதான் என்று வாதிட்டார்கள். விதிவிலக்கை ரத்து செய்த்து செல்லாது, எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அந்த விதிவிலக்கின்கீழ் நாங்கள் நெல் பயிரிடலாம், காரணம் வைக்கோலும் மாட்டுக்குத்தான் பயன்படுகிறது என்றெல்லாம் வாதாடினார்கள். ஆனால் இறுதியில் அவர்களுடைய வாதம் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று தீர்ப்பினை வழங்கி விட்டார்கள். இப்போது ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுகள் என்று கொடுத்தால், அதற்கு "சுழற் பயிர் முறை" என்று வந்துவிடும். ஏனென்றால், மாற்றுப் பயிர் செய்கிறோம் என்று வந்துவிடும். நன்றாக இருந்தால் அதற்குப் பிறகு தொடர்ந்துகூட 2 அல்லது 3 ஆண்டுகளுக்கும் பயிர் செய்ய வேண்டிய நிலைமை வந்துவிடும். அடிக்கட்டை வெட்டுவதற்கு ஒரு ஆண்டுக்கு மேலே ஆகும் என்பது எப்படி என்பது எனக்குப் புரியவில்லை. அவர்களுக்கு விருப்பம் இருந்தால், அடிக்கட்டை வெட்டிய அடுத்த ஆண்டே போட்டால்கூடப் பரவாயில்லை. தரிசாகக் கிடந்தால்கூட,

அதைப்பற்றி யோசிக்கலாம். ஆனால் தரிசாகக் கிடக்கிறதே, இந்த நெருக்கடி யான நேரத்தில் ஏதாவது உற்பத்தி செய்யலாம் என்று அவர்கள் வந்தால், அதுவும் அவ்வளவாகச் சரியாக இருக்காது என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே அவர்கள் சொன்னதையும் கவனத்தில் வைத்துக் கொண்டு, தக்க நேரத்தில் பரிசீலனை செய்யலாம் என்று சொல்லிக் கொண்டு, இப்போது இந்தச் சட்ட முன்வடிவை அப்படியே நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: ஒரு சின்ன சந்தேகம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவரவர்களும் பேசியாகிவிட்டது. அமைச்சர் அவர்களும் பதிலளித்தாகி விட்டது. இதற்குப் பிறகு சந்தேகம் என்றால்.......................

திரு. சி. வி. ராஜகோபால்: துணைத் தலைவரவர்களே, தூத்துக்குடி, திருநெல்வேலிப் பகுதிகளில் கடற்கரையோரங்கள் மைல் கணக்கில் பாலை வனம்போல இருக்கின்றது. வெறும் மணற்காடாக இருக்கின்றது. எவ்வளவு பணத்தைக் கொட்டி அந்தப் பகுதிகளைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்றாலும், பத்தாண்டு அல்லது இருபதாண்டு காலம் ஆகக் கூடும். எனவே அதற்கும் ஒரு விதி விலக்கினை அரசு தருமா என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்லவில்லை.......................

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/1975) நிறைவேற்றப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/1975) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 14/1975).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 14/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகின்றேன்.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 38/1961) 1961 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது. அது மூன்றுண்டுக் காலத்திற்குச் செயலில் இருந்தது. பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களின் வாயிலாக அவ்வப்போது இச்சட்டத்தின் செல் திறன் நீட்டிக்கப்பட்டது. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாப்பு அளித்தல்) சட்டத்தின் மூலம் (தமிழ்நாடு சட்டம் 1/1971) மேற்படி சட்டத்தின்

@ 277-278 ஆம் பக்கங்களில் இணைப்பு IV-ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.